



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக திருச்சிக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (15.06.2025) திருச்சி விமான நிலையத்தில் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா உள்பட அமைச்சர்கள் , மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.6.2025) கல்லணையில், காவிரி உபவடிநிலப்பகுதி மற்றும் கல்லணைக் கால்வாய் ஆகியவற்றின் பாசன உள்கட்டமைப்புகளில் விரிவுப்படுத்துதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது குறித்த புகைப்படக்காட்சிகளை பார்வையிட்டார். உடன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, எஸ். முரசொலி, சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பிரியங்கா பங்கஜம், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் ஆர். தயாளகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



**வி**வேகம் என்னும் “வெள்ளி”
முளைத்து, சாதிப் பித்து
எனும் “சனி” தொலைந்தால்தான்
சமத்துவம் எனும்
" ஞாயிறு " தோன்றும்.

....கலைஞர்....



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக திருச்சிக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (15.06.2025) திருச்சி விமான நிலையத்தில் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா உள்பட அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# ஈரோடு கிழக்கு சட்டமன்ற அலுவலகம் - ‘அப்பா’ கணினி பயிற்சி முகாம்!

**அமைச்சர் சு.முத்துசாமி – அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி. திறந்து வைத்தனர்!**

ஈரோடு, ஜூன் 16 -

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஏற்பாட்டில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் பெண்கள் கணினி அறிவை வளர்த்துக் கொள்ளும் வகையில் “அப்பா” இலவச கணினி பயிற்சி முகாம் அலுவலகம் மற்றும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகியவற்றில் மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராசு ஆகியோர் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் வி.சி சந்திரகுமார், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என்.சிவக்குமார், வீரமணி ஜெயக்குமார், மாவட்ட நிர்வாகிகள் ஆ. செந்தில்குமார், செல்லபொன்னி, க.சின்னையன் ப.க.பழனிச்சாமி, டி.எஸ். குமாரசாமி, கதிரம்பட்டி மகாலிங்கம், எல்லப்பாளையம் சிவக்குமார், மாநகர மு.சுப்பிரமணியன், இரா.சேகரன், ஜி.சண்முகம், விமல் (எ) நந்தகுமார், கே.சந்திரசேகர், திலகவதி, கனிமொழி நடராஜன், பகுதி கழக செயலாளர்கள் குமாரவடிவேல்,

வி.சி.நடராஜன், வி. செல்வராஜ், பொ.ராமச்சந்திரன், அக்னி டி.சந்திரசேகரன், வில்லரசம்பட்டி ஏ.முருகேசன், குறிஞ்சி என்.தண்டபாணி, க.லட்சுமணகுமார், இமயம் சிவக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் பழனியப்பா, ந. செந்தில்குமார், புவனேஸ்வரி பாலசுந்தரம், சக்திவேல், ராமலிங்கம், குணசேகரன், சசிக்குமார், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் சேர்க்காட்டில் அமைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவமனை கட்டிடத்தை கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றியக் குழுத் தலைவர்கள் லோ.ரவிச்சந்திரன், வேல்முருகன், துணை தலைவர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 500 பேருக்கு பல்வேறு நல உதவிகள்!


# சிவகங்கை மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப் பயணம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கை!

சிவகங்கை .ஜூன் 16 -

சிவகங்கை மாவட்டத்தில் நாளை (17ஆம் தேதி) தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கட்சி நிகழ்ச்சிகள் பங்கேற்கிறார்.

இது குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் கூறியதாவது.



தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி வரும் திராவிட மாடல் நாயகர் தலைவர் முதல்வர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறது. பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக சென்று அரசின் திட்டபணிகள் செயல்படும் விதம் ,அவற்றின் முன்னேற்றம் குறித்தும் மக்களின் குறைகளை கேட்டும் ,களஆய்வு நடத்தியும் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். அதன் தொடர்ச்சியாக நாளை (17.06.2025- செவ்வாய்க்கிழமை) சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

17.6.25 செவ்வாய்க்கிழமை மதுரையில் இருந்து கார்முலம் வருகை தரும் துணை முதல்வருக்கு திருப்புவனத்தில் மாவட்ட கழகத்தின் சார்பில் காலை 9.30 மணிக்கு எனது (கேஆர்.பெரிய கருப்பன்) தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

காலை 10 மணி அளவில் காணூர்கண்மாயில் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தடுப்பணை திட்டப்பணி யினை பார்வையிடுகிறார்.

10.30 மணியளவில் சிவகங்கை முதல் நகர மன்ற தலைவர் கழக மூத்த முன்னோடி சொ. லெ. சாத்தையாவை அவரது இல்லத்தில் சந்தித்து நலம் விசாரிக்கிறார் . 11மணிக்கு சிவகங்கை தாலுகா சோழபுரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டப்பணி களை பார்வையிடுகிறார். 11.30 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அரசின் திட்டப்பணிகள் செயல்பாடுகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்கிறார். பகல் 12 மணியளவில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள திடலில் முடிவடைந்த திட்ட பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். அந்த மேடையில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு பல்வேறு அரசு துறைகளில் சார்பில் நலத் திட்ட உதவிகளை வழங்கி பேருரை ஆற்றுகிறார்.

சிவகங்கை அரசு வேலு நாச்சியார் மாளிகையில் பகல் உணவு முடிந்து மாலை 4 மணி அளவில் திருப்பத்தூரில் ராஜேஸ்வரி மகாலில் கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், துணை அமைப்பாளர்களை சந்திக்கிறார்.

ஆர்.கே.மகாலில் மாவட்ட இளைஞரணி, ஒன்றிய, நகர,பேரூர் கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களை சந்தித்தல் .

இத்தகவலை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் தெரிவித்தார். முன்னதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக திடலில் நடைபெற்று வரும் பந்தல் பணிகளை கூட்டுறவு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பார்வையிட்டு பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாள் நிறைவு நாளை முன்னிட்டு திருமயம் சட்டமன்ற தொகுதியில் 2025 ஜூன் 3 தேதி முதல் 2025 செப்டம்பர் 11வரையிலானா 101 நாட்களுக்கு 101 ஊராட்சிகளில் நாள் ஒன்றுக்கு 500 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு விடியல் விருந்து எனும் திட்டத்தின் மூலம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் தேக்காட்டூர் ஊராட்சியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில் மற்றும் தி.மு.க. மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் அண்ணாமலை ரகுபதி ஏற்பாட்டில் ‘விடியல் விருந்து’ திட்டத்தில் பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது ஜெ.ஜெ கல்லூரி செயலாளர் சுப்பிரமணியம், அரிமளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பொன் இராமலிங்கம் மற்றும் அரிமளம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.ஆர் இளையராஜா மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.